தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 13 நவம்பர் 2013 கனி 12


R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2012-2014 Posted at Batlagundu Post office on 11 th Nov. 2013

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.



BATLAGUNDU CHURCH OF CHRIST
MEETS HERE
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com


To

நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்
எபேசியர் 2:10

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M



அக்டோபர் மாதம் ஞானஸ்நானம் பெற்றவர்கள்



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:** *(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. *(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m. *(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m. *(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel. *(NEW DELHI Contact Mobile: 09810896789)*

## மூன்று விதிகள்
## The Rule of Three

# 3

மூன்று காரியங்கள் அடக்கவேண்டியவை:
கோபம், நாவு, போக்கு

மூன்று காரியங்கள் விருத்திசெய்யவேண்டியவை:
தைரியம், அன்பு, சாந்தம்

மூன்று காரியங்கள் புகழப்படவேண்டியவை:
சிக்கனம், உழைப்பு, தாமதமின்மை

மூன்று காரியங்கள் வெறுக்கப்பட வேண்டியவை:
கொடூரம், கர்வம், நன்றியறியாமை

மூன்று காரியங்கள் தேவையென விரும்பப்படவேண்டியவை:
ஆரோக்கியம், மனதிருப்தி, நண்பர்கள்

மூன்று காரியங்கள் ரசிக்கப்படவேண்டியவை:
பெருந்தன்மை, புத்திக்கூர்மையான சக்தி, வசீகரமிக்கவை

மூன்று காரியங்கள் கொடுக்கப்பட வேண்டியவை:
தேவையிலிருப்போருக்கு தர்மம்,
கவலையிலிருப்போருக்கு ஆறுதல்,
தகுதியுடையோருக்குப் பாராட்டு

-The Voice of Truth International

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



# வேத அறிவுப் போட்டி எண்: 159

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வோர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. மொரேசா ஊரைச் சேர்ந்த தீர்க்கதரிசியின் பெயர் என்ன?
2. நாங்கள் கட்டளையிடுகிறவைகளை நீங்கள் செய்துவருகிறீர்களென்றும் இனி மேலும் செய்வீர்களென்றும், உங்களைக் குறித்துக் கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறோம் என்று பவுல் எந்த சபையாருக்கு கடிதம் எழுதுகிறார்?
3. அவர் சமுத்திரத்தை அதட்டி, அதை வற்றிப்போகப்பண்ணி, சகல ஆறுகளையும் என்னவாக்குகிறார் என்று தீர்க்கன் குறிப்பிடுகிறான்?
4. விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்திய இருவர் யார்?
5. நீர் அவனுடைய ஈட்டிகளினாலேயே அவனுடைய கிராமத்து அதிபதிகளை உருவக்குத்தினீர் என்று சொல்லும் தீர்க்கன் யார்?
6. அப்போஸ்தலனாகிய பவுலுக்கு வெகு தீமை செய்தவன் யார்?
7. பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும் என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் சொன்னார்?
8. எந்த தீவார் ஓயாப்பொய்யர், துஷ்டமிருகங்கள், பெருவயிற்றுச் சோம்பேறிகள் என்று அவர்களிலொருவனாகிய தீர்க்கதரிசியானவனே சொல்லியிருந்தான்?
9. எந்த தீர்க்கதரிசியினுடைய நாட்களில் ஒருவன் ஆலையின் தொட்டியில் ஐம்பது குடம் மொள்ள ஆலையினிடத்திலேவந்தபோது இருபது குடம் மாத்திரம் இருந்தது?
10. கிறிஸ்து இயேசுவினிமித்தம் பவுலோடு காவலில் வைக்கப்பட்டிருக்கிற எப்பாப்பிராவும் மற்றவர்களும் வாழ்த்துதல் சொல்லுகிறார்கள் என்று பவுல் யாருக்கு எழுதுகிறார்?

## ஏதேன் Eden

- தேவன் உண்டாக்கிய தோட்டம் - ஆதி.2:8
- முதல் மனிதனை அங்கே வைத்தார் - ஆதி.2:15
- இந்த தோட்டத்தில் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் தோட்டத்தின் நடுவில் ஜீவ விருட்சத்தையும் முளைக்கப் பண்ணினார் - ஆதி.2:9
- ஏதேன் என்பதற்கு 'மகிழ்ச்சியான இடம்' எனப்பொருள்
- டைகிரீஸ், யூப்ரடீஸ் என்ற நதிகள் பாய்கிற இடமாக இருந்தது.



சிறுவர் பகுதி

# பூமியிலிருந்து அகற்றவேண்டும்

வேத பகுதி: அப்போஸ்தலர்22:17-22



**அ**ப்போஸ்தலனாகிய பவுலை அறியாதவர்களே இருக்க முடியாது ஏனென்றால் பரிசுத்தவேதாகமத்திலே அவர்தான் அதிகமான புத்தகங்களை எழுதியிருக்கிறார். அப்படிப்பட்ட ஒரு பரிசுத்தவானை முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஜனங்கள் அவனை பூமியிலிருந்து அகற்றவேண்டும் என்று சொன்னார்கள். சொன்னவர்கள் வேறுயாரும் அல்ல அவனுடைய சுய ஜனத்தார்களே! அவனுக்கு விரோதமாக மிகுந்த சத்தமிட்டனர். இன்றைக்கும் அப்படித்தான் சுய ஜனங்கள் நம்மை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதைப்போல பவுலை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் ஞானஸ்நானம் பெற்று பின்பு எருசலேமுக்குத் திரும்பிவந்து, தேவாலயத்திலே ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில், ஞானதிருஷ்டியடைந்து அவரைக் (கர்த்தரைத்) தரிசித்தான். அப்பொழுது அவர் அவனை நோக்கி: நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம்பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ என்றார்.

அதற்கு பவுல்: ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெபஆலயங்களில் அடித்ததையும், உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது நானும் அருகே நின்று அவனைக் கொலைசெய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டிருந்ததையும். இவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றான். அதற்கு அவர்: நீ போ, நான் உன்னைத் துரமாய் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன் என்றார்.

அந்தப்படியாக அப்போஸ்தலனாகிய பவுலை தேவன் எடுத்துபயன்படுத்தினார். அவன் மூன்று சுவிசேஷப்பயணத்தினால் அநேக சபைகளை ஏற்படுத்தினான். மேலும் 14 நிருபங்களையும் எழுதினான். பவுல் சொல்லும்போது எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம்வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன் என்கிறார். அவர் காலதாமதம் செய்யாமல், தேவனுடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, தாமதமில்லாமல் ஊழியம் செய்யும்படியாக கடந்து சென்றார். இந்தப்பவுலைப்போல கர்த்தருக்கு நீங்களும் எதிர்காலத்தில் ஊழியம் செய்வீர்களா?

**மனப்பாட வசனம்**


**“தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்படமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” (லூக்கா4:24)**



திவேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 13 நவம்பர்-2013 கனி - 12

ஆசிரியருரை

# இச்சையடக்கம்
## Self - Control



BLD014561 [RF] © www.visualphotos.com

இச்சையடக்கம் நம்முடைய வாழ்வில் நலமான காரியங்களை ஏற்படுத்தும். நம்முடைய ஆதித்தாய் இச்சையடக்கம் இல்லாதபடியால் தேவன் விலக்கி வைத்திருந்த கனியை இச்சித்து அதை பறித்து புசித்து பாவிகளாக மாற்றப்பட்டனர். இச்சையடக்கத்தைக் குறித்து தேவன் ஆதிமுதலாகவே போதித்துக்கொண்டு வந்தார். புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய சபைக்கு எழுதும்போது; “ஆவியின் கனியோ, அன்பு,சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை” என்கிறார் (கலா.5:22,23). இந்த ஆவியின் கனிகளில் ஒன்றுதான் இச்சையடக்கம். ஆவிக்குரியவர்கள் இவைகளை ஏற்றுக்கொண்டு கர்த்தருக்குப் பிரியமாய் வாழ பிரயாசம் கொள்ளுகின்றனர்.

நீங்கள் ஆவிக்குரியவர்களா அல்லது மாம்சத்திற்குரியவர்களா? “மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன; விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றார் (கலா.5:19-21). ஆவியின் கனிகள் ஒன்பது என்று பார்த்தோம் ஆனால் மாம்சத்தின் கிரியைகள் பதினேழு என்று பார்க்கிறோம். ஆவியின் கனிகளைக் காட்டிலும் மாம்சத்தின் கிரியைகள் அதிகமாக இருக்கிறது. அதைப்போல உலகத்தில் பாவம் பெருகி இருக்கிறது. ஆனால் பாவம் பெருகின இடத்தில் கிருபை பெருகியுள்ளது என்பது மிகவும் ஆசீர்வாதமான ஒன்றாக இருக்கிறது. இந்த கிருபையைப் போக்கடிக்கக்கூடியவர்கள் பெருகி

இருக்கிறார்கள் என்பது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. மாம்சமும் ஆவியும் ஒன்றுக்கொன்று விரோதமாக செயல்படுகிறது என்று வேதம் போதிக்கிறது. “மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது” (கலா.5;17). ஆம், இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. நாம் நலமான காரியங்களை செய்ய விரும்புகிறோம். அப்படிப்பட்ட சமயங்களில் மாம்சம் ஒத்துழைக்காமற்போகிறது. பின்பு மனஸ்தாபப்படுகிறோம் அல்லது வேதனை அடைகிறோம். அந்த சமயத்தில் அதை செய்திருந்தால் எவ்வளவோ நன்மை கிடைத்திருக்கும் என்று நினைக்கிறோம். அது ஆவிக்குரிய சிந்தையாக இருக்கிறது. அதைசெய்யாதபடி மாம்சம் தடையாக இருக்கிறது. ஒரு கிறிஸ்தவன் மாம்சபிரகாரமாகவும், ஆவிக்குரியபிரகாரமாகவும் நடக்கமுடியாது. அப்படி நடந்தால் அவன் ஒரு கிறிஸ்தவனாக இருக்கமுடியாது. அவன் வெறும் பெயர் கிறிஸ்தவனாகவே இருக்கமுடியும். ஏனெனில் “கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்” என திருமறை அவர்களைக்குறித்து சாட்சிகொடுக்கிறது (கலா.5:24). நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருப்பீர்கள் என்றால் உங்களில் இச்சையடக்கம் இருக்கவேண்டும். நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம். அப்பொழுது உங்களுடைய ஆத்துமா காக்கப்படும்.

மேலும், இச்சையடக்கத்தைக்குறித்து பவுல் போதிக்கும்போது; “அவன், நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான்” (அப்.24:25). அநேகருக்கு இச்சையடக்கத்தைக் குறித்து போதித்தால் பயஉணர்வு உண்டாகுகிறது உண்மைதான். நாம் எப்படி தேவனுடைய பார்வையில் நிற்கப்போகிறோம் என்ற பயஉணர்வு. தேவன் நன்மையானாலும் தீமையானாலும் நியாயத்தீர்ப்பிலே கொண்டுவந்து நிறுத்துவார் என பிரசங்கி சொல்கிறான். தேவனுக்கு மறைவானவைகள் ஒன்றுமில்லை. ஆயைால், இச்சையடக்கத்தைக்குறித்து பேசும்போது அநேகர் அந்தப்போதனையில் நிலைத்திருக்கமுடியாமல், தங்களுக்கு ஏற்றபோதகர்ளை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். மேலும் யாக்கோபு சொல்கிறார்; “உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது; உங்கள் அவயவங்களில் போர்செய்கிற இச்சைகளினாலல்லவா? நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலைசெய்தும், பொறாமையுள்ளவர்களாயிருந்தும், அடையக்கூடாமற்போகிறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும்பண்ணியும், நீங்கள் விண்ணப்பம்



## தேவனுடைய வார்த்தை சுருக்கிக் கூறப்பட்டுள்ளது
## எர்க்ஷுள் ரர்ழ்க் நன்ம்ம்ஹழ்ண்கஷ்ங்க்

இந்த புத்தகம் வெளிப்படுத்துகிறது
தேவனுடைய மனதை,
மனிதனுடைய நிலையை,
இரட்சிப்பின் வழியை,
விசுவாசிகளின் மகிழ்ச்சியை

இதனுடைய கோட்பாடுகள் பரிசுத்தமானவை,
இதனுடைய கற்பனைகள் பரிசுத்தமானவை,
இதனுடைய வரலாறுகள் உண்மையானவை,
இதனுடைய தீர்ப்புகள் மாறாதவை

வாசி இதை ஞானமடைய,
விசுவாசி இதை இரட்சிப்படைய,
பயிற்சிசெய் இதை பரிசுத்தமடைய.

இது கொண்டுள்ளவைகள்:
ஒளி உன்னை வழிநடத்த,
போஜனம் உன்னை போஷிக்க,
ஆறுதல் உன்னை உற்சாகப்படுத்த.

இது வழிப்போக்கனின் வரைபடம்,
புனித பயணியின் ஆதாரம்,
விமானியின் திசைகாட்டி,
படைவீரனின் வாள்,
கிறிஸ்தவனின் கதாபாத்திரம்
இங்கே
பரதீசு முன்நிலையில் வைக்கப்பட்டுள்ளது,
பரலோகம் திறக்கப்பட்டுள்ளது,
நகரத்தின் கதவுகள் மூடப்பட்டிருக்கவில்லை.

கிறிஸ்து இதனுடைய மிகப்பெரிய சாராம்சம்,
நம்முடைய நன்மை இதனுடைய வரிவடிவம்
தேவனுடைய மகிமை இதனுடைய முடிவு

இது

மனதை நிரப்பும்,
இதயத்தை ஆளும்,
கால்களை நடத்தும்


இதை வாசி
நிதானமாக,
அடிக்கடி,
ஜெபத்தோடு.

இது
ஒரு செல்வத்தின் சுரங்கம்,
ஒரு மகிமையின் பரதீசு,
ஒரு இனிமையின் நதி.

இது
வாழ்வில் உனக்குக் கொடுக்கப்பட்டுள்ளது,
நியாயத்தீர்ப்பிலே திறக்கப்படும்,
என்றென்றும் நினைக்கப்படும்.

இது
சம்பந்தப்படுகிறது மாபெரிய பொறுப்போடு
வெகுமதியளிக்கிறது மிகப்பெரிய உழைப்பிற்கு
கண்டிக்கிறது இதன் பரிசுத்தக்காரியங்களை
அசட்டைப் பண்ணுகிறவர்களை.

-The Voice of Truth International.



3. (1கொரிந்தியர்15:32) சரியானதைச் செய்ய எந்த காரணமுமிருக்காது.

4. வாழ்க்கையின் எல்லா நம்பிக்கையும் அழிந்து போனால் சுய ஒழுக்கத்திற்கு எந்த நோக்கமுமிருக்காது.

முடிவுரை:

1. இயேசுவின் உயிர்த்தெழுதல் நம் விசுவாசம், இரட்சிப்பு நம் நம்பிக்கையின் மையமாகும்.

2. இதிலே சிந்தைக்குரியது முழுவதும் கிறிஸ்துவின் வாழ்க்கையல்ல. மாறாக அவருடைய உயிர்த்தெழுதலே இந்த பூமியிலே வாழ்ந்த வாழப்போகிற எல்லா மனிதனிலிருந்து கிறிஸ்துவை வேறுபடுத்திக் காட்டுவது அவருடைய உயிர்த்தெழுதலே

3. இயேசுவின் போதனைகள் மற்றும் அவர் சொன்னவைகளின் உண்மைத் தன்மையை நிரூபித்தது, அவருடைய உயிர்த்தெழுதலே. அவருடைய சீடர்களை சுவிசேஷத்தால் உலகை நிரம்பும்படி அனுப்பியதும் அவருடைய உயிர்த்தெழுதலே. புதிய ஏற்பாட்டு உபதேசங்களை உயிர்த்தெழுதல் நிமித்தமே நாம் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ முடியும். இடைப்பட்ட காரணம் என்பது இல்லை. இன்றைக்கு சொல்லப்படும் அநேக கோட்பாடுகள் இடைப்பட்ட நிலையில் நிற்கவே முயல்கின்றன என்பது உண்மையே.

4. கிறிஸ்து உயிர்த்தெழாமற்போயிருந்தால் நான் இழப்பது என்ன? எல்லாமே.

5. இந்த சரித்திர உண்மையை நான் நம்பாவிட்டால் நான் இழப்பது என்ன? அனைத்தையுமே.

## ஆசிரியர் கடிதம்

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாசகர் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இம் மாத இதழை மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். புதிய விலாசங்களை எழுதி அனுப்புங்கள். இம் மாதம் முதல் நமது இதழ் 5000 பிரதிகளாக அச்சிடப்படுகிறது. இரண்டு இணை ஆசிரியர்கள் நம்முடன் இணைந்து பணியாற்ற உள்ளனர். சென்னையிலும் திருச்சியிலும் நமது 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' கிளை அலுவலகங்கள் செயல்பட உள்ளன.

மேலும் உங்களுக்கு வேதபாடங்கள் படிக்க விருப்பம் இருந்தால் உடனே எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். அஞ்சல்வழி வேதபாடங்களை அனுப்பிக்கொடுப்போம்.

எங்களோடு இணைந்து கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய கர்த்தருடைய ஊழியர்களை அழைக்கிறோம். 2014-ம் ஆண்டு நாம் செய்ய வேண்டிய பணிகள் நிறைய இருக்கிறது. ஜெபியுங்கள்.

**அன்புடன்,**
**ஆசிரியர்**



பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குக் சித்திக்கிறதில்லை. நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்'' என்கிறார் (யாக்.4:1-3). யூதாஸ் இந்தவிதமான இச்சையுடையவனாக இயேசுவின் சீஷர்களில் ஒருவனாயிருந்தான். ஆகையால் பிசாசு அவனுக்குள் புகுந்தான். பின்பு இயேசுவைக் காட்டிக்கொடுக்கும்படி சமயம் தேடிக்கொண்டிருந்தான் என்று லூக்22-ம் அதிகாரத்தில் படிக்கிறோம்.

இச்சையடக்கம் நம்முடைய வாழ்வில் வெற்றியைக் கொண்டுவரும். ஆகையால் பவுல் கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; ''பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்'' (1கொரி.9:24,25). உலகத்திலே அநேக ஓட்டப்பந்தய வீரர்களை நாம் அறிகிறோம். அவர்கள் எப்படியாவது ஓட்டப்பந்தயத்தில் பரிசை பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு ஓடி பரிசை பெற்றுக்கொள்ளுகிறார்கள். இப்படி ஓடக்கூடிய ஒரு பெண்மணியை எப்படியாவது இந்த ஓட்டப்பந்தையத்தில் இருந்து தோற்கடிக்கவேண்டும் என்றநோக்கத்தோடு அதை பார்த்துக்கொண்டிருந்த பார்வையாளர்கள் தங்க முலாம் பூசப்பட்ட ஆப்பிள் பழங்களை அவள் ஓடிவரும் வழியில் உருட்டி விட்டார்களாம். அதைப் பார்த்த அந்த வீராங்கனை பார்வையாளர்கள் நமக்கு நல்ல வெகுமதி கொடுக்கிறார்கள் என நினைத்து அவைகளை இச்சித்து எடுக்க ஆரம்பித்தாள். அவள் பந்தயத்தில் கொடுக்கும் பரிசை காட்டிலும் இது விலையேறப்பெற்றது என எண்ணினாள் அவளுடைய இச்சை அவளுடைய பந்தயப் பொருளை இழக்கச் செய்தது. மற்ற வீராங்கனை பரிசை பெற்றாள். அன்பானவர்களே, நாமும் கூட சிலவேளைகளில் பிசாசு நமக்கு முன்பாக வைத்திருக்கிற சில ஆசைகளுக்கு அடிமையாக அவைகளை இச்சிக்க ஆரம்பிக்கிறோம். முடிவில் ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேற்றமடையாமல் பின்னோக்கி தள்ளப்படுகிறோம். இதற்கு நாமே பொறுப்பாளியாகிறோம். உலகத்தில் அநேகர் இவ்விதமான இச்சைகளுக்கு தங்களை ஒப்புவித்து வழிவிலகிப்போகிறார்கள். ''நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன்செய்தது. இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம்

மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்'' (ரோம.7:5,6). மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் மரணத்துக்கு ஏதுவான கனிகளை கொடுத்துக்கொண்டிருந்தோம். ஆனால் இப்பொழுது அவைகளிலிருந்து விடுதலையாக்கப்பட்டு புதுமையான ஆவியின்படி ஊழியம் செய்யும்படி, அதாவது நம்மைகட்டியிருந்த நியாயப்பிரமாணத்திலிருந்து விடுவிக்கப்பட்டு புதிதும் ஜீவனுமான மார்க்கத்திற்கு திருப்பப்பட்டுள்ளோம். நாம் இனி அவைகளுக்கு அடிமையானவர்களல்ல அதினின்று விடுதலையாக்கப்பட்டவர்களாயிருக்கிறோம். ``ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது'' (ரோம.6:12-14). இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்கள், ஞானஸ்நானத்திலே அவரோடு எழுப்பப்பட்டவர்கள் மத்தியில் பாவம் ஆட்சிசெய்ய இடம்கொடுக்கக்கூடாது. உங்களுடைய சரீரம் கிறிஸ்துவின் அவயவங்களாயிருக்கிறபடியால் அவைகளை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். நாம் இப்பொழுது நியாயப்பிரமாணத்திற்கு கீழானவர்கள் அல்ல கிருபைக்குக் கீழானவர்களாக இருக்கிறோம். இப்படியிருக்கும்போது பாவம் நம்மைமேற்கொள்ளாது.

இன்று அநேகர் பாவத்தை ஜெயிக்க முடியவில்லை. எப்பொழுது பார்த்தாலும் தவறான எண்ணங்கள் என்னுடைய நினைவில் வந்துகொண்டேயிருக்கிறது. அதை என்னால் மேற்கொள்ளமுடியவில்லை என்று சொல்லுகிறார்கள். அன்பு வாசகரே, நீங்கள் இயேசுவின் மூலம் மீட்கப்பட்டவர்களாயிருந்தால் பாவத்திற்கு இடமில்லை. பாவம் உங்களை மேற்கொள்ளமுடியாது. உங்களுடைய அஸ்திபாரம் சரியில்லையென்றால் பாவம் உங்களை மேற்கொள்ள வாய்ப்பு உள்ளது. போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுவின் மீது உங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தை துவக்குங்கள், மற்றபடி உங்களுடைய விசுவாசம் வீணாய்போய்விடும். ``ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது'' என்கிறார் (வெளி.2:7). இச்சையடக்கத்தோடு இருந்து போராடும் அனைவருக்கும் இக்கனியைக் கொடுப்பார். நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஆவிக்குரிய கிறிஸ்தவர்களாக நிலைத்திருந்து போராடுங்கள்.



# துவாலையின் பாடம் -3

Lessons of the Towel - *Jerry Bates*

**இயேசுவின் உயிர்த்தெழுதல் - 1கொரிந்தியர் 15:1-23**

-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை

-சென்றமாத தொடர்ச்சி



III) இது முக்கியமானது ஏனென்றால் அழியாமை என்பது இதைச் சார்ந்தே இருக்கிறது.

அ) நம்முடைய மரணம் என்பது உண்மை நாம் அதை மறுக்க முடியாது, நாம் அனைவரும் மரணத்துக்கு பயப்படுகிறோம்.

1. அங்கே நம்பிக்கையில்லை
2. அது புரியாத புதிராக இருக்கிறது. நாம் தெரியாததற்கு பயப்படுகிறோம் (புதிய மக்கள் மற்றும் பலர்)
3. நாம் இதை தனியாகவே சந்திக்க வேண்டும்.
4. நமக்குப் பிரியமானவர்களிடமிருந்து பிரிக்கப்படுவோம்.
5. நம்முடைய தனிப்பட்ட நம்பிக்கைகளும் நோக்கங்களும் மரணத்தில் முடிந்துவிடும்.
6. நாம் முற்றிலும் அழிக்கப்படக்கூடும் என்ற பயத்தை நம்மிலே மரணம் மேலோங்கச் செய்யும். மரணம் மனித இனத்தின் மிகப் பெரும் எதிரி. இது கிறிஸ்து ஒருவரால் மட்டுமே தோற்கடிக்கப்பட்டது.

ஆ) உயிர்த்தெழுதல் நமக்கு அன்பானவர்களோடுள்ள நம்முடைய உறவுகள். மரணத்தில் முடிந்து விடுவதில்லை என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது.

1. சான்றாக பிறரோடுடனான உறவுகள் (யோவான் 20:13-16) மகதலேனா மரியாள் கிறிஸ்து சென்றிருப்பார் என்று நினைவால் அழுது கொண்டே கல்லறைக்கு வந்தாள். மெய்யாகவே அங்கே அவர் அவளோடு இருந்தார். அவள் அதை அறியவில்லை. இயேசுவானவர் அவளைப் பெயர் சொல்லி அழைத்தார். அப்போது அவள் குரலில் மகிழ்ச்சியால் நிறைந்ததை நாம் கற்பனை செய்து பார்க்கலாம். அவள் கிறிஸ்துவை நெருங்கி தழுவ முயற்சித்தாள் ஆனால் கிறிஸ்து அவளை தொட வேண்டாமென்று கட்டளையிட்டார். அவர்களுடைய உறவு தொடர்ந்தது காரணம் கர்த்தர் மரணத்தை விட பலமானவர்.
2. தேவனோடு கூடிய நமது உறவு தொடரும். முன்பிருந்ததைவிட இன்னும் ஆழமாக நம்மை மறுரூபமாக்கும்.

இ) கிறிஸ்து உயிர்த்தெழுந்ததினாலே நமக்கு இது தெரியும். எந்த விசுவாசத்தைப் பற்றியும் கவலையில்லாமல் சரித்திரப்பூர்வமாக இது உண்மையாயிராவிட்டால் எந்த ஒரு வாக்குமில்லை (1கொரிந்தியர் 15:20-22) தேவன் கர்த்தரை எழுப்பினார் அவருடைய வல்லமையினாலே நம்மையும் எழுப்புவார். (1கொரிந்தியர் 6:14)

1. மரணத்திற்குப் பின் ஒரு வாழ்வில்லையென்றால் நாம் மிகவும் பரிதபிக்கப்பட்டவர்களாயிருப்போம். (1கொரிந்தியர் 15:19)
2. மரணத்துக்குப் பின் ஒரு நம்பிக்கையில்லாமற்போகுமென்றால் இந்த வாழ்க்கையில் ஒரு நோக்கமாயிருக்காது. 2006-ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 1007 பேரில் 36 சதவீதம் வயது வந்தவர் அமெரிக்கர்கள் மட்டுமே சரீர உயிர்த்தெழுதலில் நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

## ஜெபியுங்கள்

- அக்டோபர் மாத ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக நன்றி சொல்லி...
- கர்த்தருடைய சுவிசேஷ வசனத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட கொடைக்கானல் பகுதியைச் சேர்ந்த சகோதர சகோதரிகளுக்காக...
- சகோதரர் ஜெர்ரி சகோதரி பவுலாவுடைய பயணத்திற்காக...
- கடந்த பத்து மாதங்களாக நம்மை பாதுகாத்த கர்த்தருக்கு நன்றி சொல்லி...
- அடுத்த மாதம் புதிதாக நமது இதழின் துணை ஆசிரியர்களாக பதவிஏற்கவுள்ள சகோ.ரீகனுக்காகவும் சகோ. கனகராஜ் ஆகிய இருவருக்காகவும்...



## 10 அருமையான உறுதிமொழியான வாக்குத்தத்தங்களை உனக்கு சொந்தமாக்கிக்கொள்

1. **மத்.17:20 - நீ விசுவாசித்தால் எல்லாம் கூடும்.**
2. **மத்.21:21 - நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசித்தால்...**
3. **மாற்.11:22-24 எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ அவைகள்...**
4. **அப்.4:12; 1பேது.5:13 - இரட்சிப்பு**
5. **மாற்கு அதி.6; லூக்.12:28 - அநுதின தேவைகள் எல்லாம் கிடைக்...**
6. **ரோம.5:2 - தேவனிடத்தில் சேரும் சிலாக்கியம்.**
7. **ரோம.1:17 - கிறிஸ்தவ வாழ்வில் வெற்றி...**
8. **கலாத்.3:14 - பரிசுத்த ஆவியானவரால் கிடைக்கும் நன்மை...**
9. **எபி.6:12 - வாக்குத்தத்தங்களை அடையலாமே!**
10. **யாக்.5:14-16 - சரீர சுகம் கிட்டுமே!**



**- ஜான் எஸ்.நாதன், சென்னை**



**இச்சையோடு இருக்கிறவன் முடிவில் காப்பாற்றப்படுவானா?**

"உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (1யோவா.2:17). ஆம், உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம். ஏனென்றால் இவைகள் பிசாசினால் உண்டானவைகள். மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். ஆகையால் அவைகள் அழிக்கப்படும். மாம்சத்தின் இச்சையை ஒருவன் விட்டுவிடாதிருப்பானேயானால் அவனும் அழிக்கப்படுவான். அவனோடு சேர்ந்தவர்களும் அழிக்கப்படுவார்கள். அதுவரை இந்த வானமும் பூமியும் காக்கப்பட்டிருக்கிறது. இந்த அழிவுக்கு தப்பிக்கொள்ள ஒரு ஆவிக்குரிய கிறிஸ்தவனாக மாறுங்கள். அதற்கு நீங்கள் செய்யவேண்டியது தேவனுடைய வசனத்தை ஏற்று, அதன்படி உங்களை மாற்றியமைத்துக்கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## சபை அங்கத்தின் சமாசாரம்

### The matter of Church Membership

*-John Thiesen*

**கேள்வி:** சபை அங்கத்தினனாய் மாறாமல் நான் கிறிஸ்துவின் சீஷனாக இருக்க முடியுமா?

இல்லை, இது இயலாதது. கிறிஸ்து தம்சபையிலிருந்து பிரிந்திருக்க முடியாது என்பதே இதன் காரணம். இது "அவருடைய சரீரம்" அவருடைய நிறைவாகிய சபை" (எபே.1:23).

தேவன் உலகமுண்டானது முதற்கொண்டே சபையைத் திட்டம்பண்ணினார். அவர் சபையாகிய **ஒரே சரீரத்தில்** யூதர்களையும் புறஜாதிகளையும் இரட்சிக்க திட்டமிட்டார் (எபே.1:23).

இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் சபையிலே சேர்க்கிறார் என வேதாகமம் கூறுகிறது (அப்.2:47). சபையானது கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி தங்கள் பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்களாலும் உருவாக்கப்பட்டது (அப்.2:38,41,47)

சபையல்ல, கிறிஸ்துவே இரட்சிக்கின்றார் என்பது உண்மையாக இருந்தபோதிலும், **நாம் சபைக்கு வெளியே இருந்து கொண்டு இரட்சிக்கப்பட முடியாது,** ஏனென்றால் இது இரட்சிக்கப்பட்டவர்களால் ஆனது! கர்த்தர் நம்மை இரட்சிக்கிற போது, நாம் தாமாகவே அவருடைய சபையாகிய அவருடைய சரீரத்தின் அங்கங்களாக மாறுகின்றோம்.

*-The Voice Of Truth International*

## நாம் ஏன் ஆராதனையில் வாய்மொழி பாடலை மட்டும் கட்டாயப்படுத்துகிறோம்

### Why We Have Vocal Music Only In Worship

J.C.Choate



கிறிஸ்துவின் சபையாராகிய நாம் மற்ற அநேக சமயக் குழுக்களிலிருந்து வேறுபட்டிருக்கின்றோம், ஏனென்றால் நம்முடைய ஆராதனையில் நாம் வாயினால் பாடுகின்றதை மட்டுமே ஏற்றுக்கொள்கிறோம். ஆனபடியினால், நாம் நம்முடைய பாட்டினை இசைக் கருவிகளோடு இணைக்கிறதில்லை. இது வித்தியாசப்படுத்துவதற்காக செய்வதில்லை என நான் தாமதமின்றிச் சொல்வேன். மாறாக, வேதாகமம் இவ்வாறு போதிக்கின்றபடியால், நம்முடைய ஆராதனை வேளைகளில் வாயினால் பாடுகின்றதையே ஏற்றுக்கொள்கிறோம்.

இரண்டு விதமான இசை உண்டு. ஒன்று வாய்மொழியில் பாடுவது இன்னொன்று இசைக்கருவியினால் பாடுவது. வாய்மொழி சங்கீதமானது பாடுகின்ற, இனிமையான ஒலியெழுப்புகின்ற இணக்கமான மனிதக் குரல்களாக, மேலும் உலகத்தில் மிக அழகான சங்கீதமாக வெளிப்படுகின்ற ஒன்றாகும். இந்தவிதமான சங்கீதம் தேவனுடைய படைப்பிலிருந்து வருகிறது. இது ஆத்துமாவிலிருந்து வருகிறது மேலும் நம்முடைய சிருஷ்டிகராகிய தேவனுக்கு துதியாகசெலுத்தப்படுகிறது. இது முழுவதும் ஆவியாயும், ஜீவனாயுமிருக்கிறது. இசைக்கருவியின் இசை மனிதனால் உருவாக்கப்பட்ட இசைக்கருவியிலிருந்து வருகிறது. இவ்வகையான கருவிகள் ஜீவனற்றது. அவைகள் ஆத்துமா அல்லது ஆவியைக் கொண்டிருக்கவில்லை. அக்கருவிகளின் மேல் மனிதன் அடிப்பதினாலும், அவைகளை இழுப்பதினாலும் அல்லது அவைகளை மீட்டுவதினாலுமே அவைகள் ஒலிகளை எழுப்புகின்றதாயிருக்கிறது. இப்போது இதன் வினாவானது; தேவன் தம்முடைய சிருஷ்டிகள் தம்மை துதிக்கும்படி விரும்புகிறாரா அல்லது மனிதனுடைய படைப்புகள் தம்மை துதிக்கும்படி விரும்புகிறாரா? எது அவருக்கு மிகவும் கருத்துள்ளதாயிருக்கும்? எபிரெய எழுத்தர், "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" (எபி.13:15) என்கிறார். நாம் நம்முடைய உதடுகளின் கனியினால் தேவனைத் துதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் என அவர் சொல்லுவதை தயவு செய்து கவனியுங்கள். அது நம்முடைய கனியாக இருக்கும். நம்முடைய பேச்சு, நம்முடைய பாட்டு, நம்முடைய ஜெபங்கள், நம்முடைய துதியின் வார்த்தைகள் போன்றவைகளே நம்முடைய உதடுகளின் கனியாக இருக்கும். யாருக்கு இது செலுத்தப்பட வேண்டும்? நிச்சயமாக, தேவனுக்கே.



(4) "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; ...." (யோவா.6:54).

(5) "ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்" (யோவா.6:57)

இந்த விருந்தை சாதாரணமான ஒரு "சடங்காக" நினைப்பவர்கள் தவறிழைக்கின்றனர். இயேசு மிகுந்த ஆழமான கருத்துடனே நிதானமாக பொருட்களை தெரிவுசெய்தார் அத்தோடு இதில் பங்குகொள்ளுகிறவர்கள் இதன் பொருள் தங்களுக்குரியதென புரிந்துகொள்வது அவர்களுடைய பொறுப்பாகவுமிருக்கிறது.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியமே இந்த ஒழுங்கான நினைவுகூருதலில் பங்குகொள்வதில் தான் கட்டப்பட்டுள்ளது. **நாம் ஜீவிக்கின்றோம், ஏனென்றால் நமக்கு ஜீவன் கொடுக்கும்படி அவர் மரித்தார், ஏனென்றால் நம்மில் அவர் ஜீவிக்கிறார்.**

## நடப்புச் செய்திகள்

- பிப்ரவரி முதல் தமிழகத்தில் மின்தடை நீங்கும்.
- 12- வது முறையாக தமிழக அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. புது மந்திரியாக விஜயபாஸ்கர் நியமனம்.
- பிறந்து நான்கு மணி நேரத்தில் குப்பை மேட்டுக்கு வந்த பெண் குழந்தை - தொடரும் அவலம்.
- கன்னியாகுமரி மாவட்டம் தனது 58 வது பிறந்தநாளைக் கொண்டாடியது.
- நடப்பு ஆண்டில் அன்னிய நிதி நிறுவனங்கள் 1,600 கோடி டாலர் முதலீடு செய்துள்ளது.

**தினமும் இரண்டு லிட்டர் தண்ணீர் குடிப்பது உடல் நலத்திற்கு நல்லது**

### வேத அறிவுப்போட்டி: 158 -ன் விடைகள்

| | |
|---|---|
| 1. கிரேக்கரிடத்தில் | - யோவேல்3:6 |
| 2. பவுல் | - எபே.4:17 |
| 3. அமத்சியா, ஆமோஸை | - ஆமோ.7:12 |
| 4. தேவனுக்கு | - பிலி.4:6 |
| 5. வைக்கப்பட்டிருக்கிறது | - ஆமோ.9:8 |
| 6. கொலேசெய | - கொலோ.2:5 |
| 7. கர்த்தருடையதாய் | - ஒப.21 |
| 8. தேவனே | - 1தெச.2:5 |
| 9. மீனுக்கு, யோனாவை | - யோனா2:10 |
| 10. நீடியசாந்தமாய் | - 1தெச.5:14 |

### வேத அறிவுப்போட்டி: 158-ல் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. D. டேவிட் | - சென்னை |
| 2. Tmt. மரகதம்திரவியம் | - கோம்பை |
| 3. Miss. கிப்ட்ராஜாமணி | - ஒட்டநத்தம் |
| 4. M. இராஜாமணி | - ஒட்டநத்தம் |
| 5. S.R. பெரியசாமி | - சேலூர் |
| 6. Sis. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 7. R. எமிமாள் ரவிக்குமார் | - பாளையங்கோட்டை |
| 8. R. ஜாணி பெபெயாள் | - சிவகாசி |
| 9. S. சரோஜினி முத்து | - தாராபுரம் |
| 10. T. பிரியங்கா | - கரூர் |
| 11. Sis. ராஜம்மாள் | - திருப்பூர் |
| 12. E. கார்த்திக் ராஜா | - மதுரை |
| 13. R. ஸ்டெல்லா இளமதி | - தாராபுரம் |
| 14. Ira. எதிராசன் | - சங்கரி |
| 15. S.A. சாமுவேல் | - பரமத்தி |
| 16. V. மெர்சி | - கோவை |
| 17. R. ஜோஸ்வா செல்வக்குமார் | - சிவகாசி |
| 18. M. ராணி | - கோவை |
| 19. K. மோகன் | - குமாரபாளையம் |

இயேசுவின் கூற்று வெறுப்பூட்டுகின்ற சமயக்கொள்கைக்கு மாறுபட்ட கருத்தாக இருந்திருக்கவேண்டும். அவர் இதை அறிவார் ஆயினும் அந்த பூரணமான அறிவுள்ள சத்தியங்கள் உருவாக்கப்பட அந்த அறிமுகம் அவசியமாயிருந்தது.

### உடன்படிக்கையின் அப்பம்

அவருடைய சிலுவைப்பாடுகளுக்கு முன்பு அப்பத்தை எடுத்து அவர், ''..வாங்கிப்புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது...''(மத்.26:26) என்றார்.

இந்த பாடங்களைக் கற்றுக்கொடுக்கும்படிக்கு, இந்த எண்ணங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக எழுகின்றன:

(1) ''இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்'' (லூக்.22:19).

(2) ''ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து...'' (1கொரி.11:26).

ஆதி கிறிஸ்தவர்கள் நினைவு விருந்துகளுக்கான இரண்டு எடுத்துக் காட்டுகளைக் கொண்டிருந்தனர்: **ஓய்வுநாள்தோறும்** கர்த்தருடைய சந்நிதியில் அடுக்கிவைக்கப்படும் நித்திய உடன்படிக்கைக்குரிய அப்பம் (லேவி.24:5-9) மற்றும் **வருடந்தோறும்** கைக்கொள்ளவேண்டியிருந்த பஸ்காவாகிய அப்பம். இன்று கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கைவைத்துள்ள பிரிவினை சபை அங்கத்தினர்கள் அவருடைய நினைவுகூருதலில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வருடத்திற்கொருமுறை பங்குகொள்கின்றனர், மேலும் புளிப்பில்லா அப்பத்திற்கும் திராட்ச ரசத்திற்கும் பதிலாக மற்ற பொருட்களை வைப்பது அசாதாரணமாக இருப்பதில்லை.

ஆனால் பழைய ஏற்பாட்டு கட்டளையின் கீழ் அடிக்கடி வருகின்ற அவர்களுடைய விருந்து அல்லது அவர்களோடு சம்பந்தப்பட்டிருந்த பொருட்கள் போன்றவற்றினிடையே தொந்தரவு ஏற்பட்டிருக்கவில்லை. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தேவன் தம்முடைய குமாரனின் நினைவுகூருதலை எத்தனை முறை கடைப்பிடிக்க விரும்புகின்றார் என்பதைப்பற்றிய அவர்களுடைய புரிந்துகொள்ளுதலில் மிகத் தெளிவாக இருந்தனர். மேலும் அவர்கள் அவருடைய சரீரத்தையும் அவருடைய இரத்தத்தையும் குறிக்கும் மாதிரிகள் எவை என்பதையும் தெளிவாக அறிந்திருந்தனர்.

இன்று உண்மைக் கிறிஸ்தவர்கள் இதே மாதிரியையே பின்பற்றுகின்றனர். ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவருவதில் அவர்களுடைய நோக்கம், அப்பம் பிட்குதலிலும் பானம்பண்ணுதலிலும் பங்கெடுப்பதாகவே இருக்கிறது (1கொரி.11:24-26).

(3) ''எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, ..... அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், ..... தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்'' (1கொரி.11:28,26).



நம்முடைய உதடுகளின் கனியினால் தேவனைத் துதிக்கின்றதின் நோக்கத்தைத் தொடர்ந்து பார்க்கையில், பவுல், ''சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக்கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து'' (எபே.5:19,20) என்று சொல்லுகிறார். ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு அல்லது பாடிக்கொண்டு, அதாவது பாடல்களின் பல்வேறு வகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பாடிக்கொண்டு என்று சொல்லுவதை தயவுசெய்து கூர்ந்து கவனியுங்கள். அத்தோடுகூட அவைகள் ஆவிக்குரியதாகவும் வேதவசனங்களுக்கேற்றபடியாகவும் இருக்கவேண்டுமென அவர் வலியுறுத்துகிறார். கடைசியாக, அவர் இந்த சங்கீதங்கள் இருதயத்தில் பக்தியுடன் பாடப்படவேண்டும், வாத்தியக்கருவிகளினால் அல்ல என்று குறிப்பிட்டுச் சொல்கிறார். இப்போது கிறிஸ்தவர்கள் பாடிக்கொண்டே இருந்தால் மட்டும், அவர்கள் தேவனை ஆராதிக்கமுடியுமா? ஒருவேளை நீங்கள் ஆம் என்று கூறலாம். ஆனால் வாத்தியக்கருவியோடு பாடுவதுபற்றி என்ன சொல்லலாம்? வேதவசனங்கள் அது பற்றி போதித்தால் அது நன்றாக இருக்கும், ஆனால் வேதவசனங்கள் எங்கே அவ்வாறு போதிக்கிறது? அவ்வாறு வசனங்கள் போதிக்கவில்லையென்றால், நம்முடைய சங்கீதத்திற்கு வாத்தியகருவியின் இசையைக்கூட்டினால், அப்புறம் நாம் கர்த்தருடைய சித்தம் செய்கின்றவர்களாயிருப்போமா?

மீண்டும் பவுல், ''கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப்பக்தியுடன் பாடி'' (கொலோ.3:16) என்கிறார். இங்கே பவுல் என்ன சொல்கிறார்? அவர் ஆவிக்குரிய மற்றும் ஞானப்பாட்டுகளினாலும் வார்த்தையினாலும் போதித்து புத்திசொல்லிக்கொண்டு கர்த்தரைத் துதித்துப்பாடுவதின் மூலம் கிரியை நடப்பியுங்கள் என்று **கிறிஸ்துவின் வசனத்தை** வலியுறுத்திச் சொல்கிறார். அதுவே உண்மையாயிருக்கின்றது, பவுலுடைய கூற்றில் வாத்தியகருவி இசையை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதாக காண்கிறீர்களா? இல்லையென்றால், ஆராதனையில் தேவனை ஸ்தோத்தரித்துப்பாட வாத்தியக்கருவி இசையை இணைக்கும்படி தொடர்வீர்களானால் நீங்கள் தேவனுடைய வார்த்தையோடு கூட்டிக் கொண்டவர்களாயிருக்கமாட்டீர்களா?

ஆனால் இதனால் ஒன்றும் தவறில்லையென நீங்கள் விவாதிக்கலாம். பிறகு யாரும் எந்தகாரியத்திலும், வேறொன்றிலும் இதில் தவறொன்றையும் காணவில்லை எனத் தொடர்ந்து கூறலாம். முக்கிய குறிப்பானது, நாம் தேவனுடைய வார்த்தையின் போதனையில் கண்டிப்பாக உறுதியாயிருக்க வேண்டும். நாம்

அவ்வாறு இல்லையென்றால், பிறகு ஏன் எப்படியாகிலும் இது குறித்து கலங்குகிறீர்கள்?

இது எனக்குப்பிடிக்கிறது அல்லது வாத்தியக்கருவியை மீட்டும் தாலந்தையும் திறமையையும் பெற்றிருக்கிறவர்கள் பற்றிய காரியமென்ன? என்றும் நீங்கள் வாக்குவாதத்துடன் திரும்பவும் வரலாம். அவர்கள் வாத்தியக்கருவிகள் மூலம் சங்கீதம் பாடிக் கர்த்தரை ஸ்தோத்தரித்தால், தேவன் அதனால் மகிமைப் படுத்தப்படமாட்டாரா? மீண்டும் நான் என்ன விரும்புகிறோனோ அதுபற்றிக் கவலை இல்லை, ஆனால் இது தேவன் என்ன விரும்புகிறாரோ அது பற்றியதாகும். ஒருவர் வாத்தியக்கருவியை இசைக்கும் தாலந்து அல்லது திறமை பெற்றிருந்து, அதன் அடிப்படையில் தேவனைத் துதிக்கும்படி அவன் வாத்தியக்கருவியை இசைக்க அனுமதிக்கப்படவேண்டுமானால், அந்த தாலந்துகளையும், திறமைகளையும் பெற்றிராத மற்றவர்கள் பற்றிய காரியம் என்ன? அந்தத் திறமைகளைக் கர்த்தருக்குக் கொடுக்கவேண்டுமென அப்பேர்பட்ட திறமைகளை ஆராதனைக்குள் திறமையற்ற அவர்கள் கொண்டுவரவேண்டுமென நாம் வாதிப்போமா? இந்தக் குறிப்பை நீங்கள் கவனிப்பீர்களென நான் நினைக்கிறேன்.

நீங்கள் வாத்தியக் கருவி இசையை வீட்டில் கொண்டிருந்தால் நிச்சயமாக நீங்கள் ஆராதனையில் அதை பயன்படுத்தலாம் என மீண்டும் இது விவாதிக்கப்படுகிறது, உண்மை என்னவென்றால், நம்மால் ஆராதனைக்குள் கொண்டு செல்ல இயலாத அநேக பொருட்கள் வீட்டில் காணப்படுகிறது. என்னுடைய குடும்பமும் நானும் இசையை விரும்புகிறோம், நாங்கள் வானொலியில், அல்லது கேசட் ரிக்கார்டில் இசையை உற்றுக்கேட்பது வழக்கம், ஆனால் ஆராதனைக்கு இது வரும்போது எங்களைப் பிரியப்படுத்துகிற அந்த காரியங்களை நிறுத்தி விட்டு, கர்த்தரைப் பிரியப்படுத்துகிற காரியத்தையே செய்ய ஆரம்பிக்கிறோம். நாம் வீட்டில் ஐஸ்கிரீம் சாப்பிடவும், ஐஸ் டீ சாப்பிடவும் விரும்புகிறோம், ஆனால் இந்தக் காரியங்களெல்லாம் ஆராதனைக்கு வெளியே செய்யப்பட வேண்டியதென நாம் உணருகிறோம்.

பழைய ஏற்பாட்டில் தாவீதும் மற்றவர்களும் இதைப் பற்றி போதித்தார்களென உரிமைபாராட்டி ஆராதனையில் வாத்தியக் கருவி இசையைப் பயன்படுத்துவதை ஆதரிப்பது முக்கியமான வாக்குவாதங்களில் ஒன்றாயிருக்கிறது. அவ்வாறு இருந்ததோ இல்லையோ, பழைய ஏற்பாடு பிரமாணம் தொடர்ந்து நிலைத்திருக்கவில்லை என்பது உண்மை, ஏனென்றால் கிறிஸ்து அதை எடுத்துப் போட்டு ஒரு புதிய பிரமாணத்தைக் கொடுக்கும்படி சிலுவையில் மரித்தார். அதை நாம், ''.... நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின'' (யோவா.1:17) என வாசிக்கிறோம். கிறிஸ்து நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் ஒழிந்து போகாது என்று சொன்னார் (மத்.5:17,18). கிறிஸ்து



''நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்...... நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை..... என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்'' (யோவா.6:51-54) என்றார்.

சிலர் இயேசு ஆவிக்குரிய உணவின் மறைபொருளாக பேசிக்கொண்டிருந்தாரென கருதலாம். உண்மையாகவே, ஜீவனுக்கான அப்பத்தைப் பற்றிய அவருடைய உரையாடல் அவருடைய போதனையின் ஆரம்பத்தில் அந்தப் பொருளைக் கொண்டிருந்தது. இதைப்போலவே யோவான்4:10-14-ல் சொல்லப்பட்ட வார்த்தைகளும் இந்த விவாதத்தில் ஜீவத் தண்ணீரென இயேசு அழைத்த ஆவிக்குரிய போஷாக்கைப்பற்றிய விஷயத்தோடு சம்பந்தப்படுகிறது. இந்த இரு பகுதிகளில் தாமே ஜீவ அப்பமும் ஜீவத்தண்ணீருமாயிருக்கிறாரென சொல்லுவதில் அவர் அவைகளைத் தமக்கு மறைபொருளாக வைத்தார்.

இயேசு தம்முடைய சீஷர்கள் தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம்பண்ணவேண்டுமெனச் சொன்னார்.

ஆனால் இந்த உதாரணத்தில், இயேசு அப்பம் (தண்ணீர் இன்னும் மற்றவை) உருவணியாக வைக்கப்பட்ட இடத்தில் ஆவிக்குரிய உணவைப் பற்றிய கருத்திலிருந்து விலகி சொற்களுக்கு நேரடியான பொருளை உடையதாய் இருக்கக் கூடாததும் பிரத்தியேகமாக சொற்களின் வடிவமாகக் கருதக் கூடாததுமான வசனப் போக்கிற்குத் திரும்பினார். அவர் **தம்முடைய சீஷர்கள் ஜீவனைப் பெற்றிருக்க தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம்பண்ண வேண்டுமென** சொன்னார். ஏனென்றால் கவனித்துக் கேட்கிறவர்கள் புரிந்துகொள்ளமுடியாத இப்பேர்பட்ட **சூசகமான** ஆழமான கூற்றிற்கு மறைபொருளாகவுங்கூட ஒப்பானதொன்றுமில்லை, மேலும் ''.....அது முதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்'' (யோவா.6:66).

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கப்புறம், சிலுவையில் பலியிடப்பட்ட அவருடைய சரீரத்தின் வாராந்திர நினைவுகூருதல்களை இன்றைய உலகில் வாழ்கின்ற விசுவாசிகள் அவருடைய கூற்றினை தோற்றத்தில் கண்டு அவர் சொல்லிய முழுக் கருத்தினையும் சரியாக புரிந்து கொள்ளமுடியும். **அவர் தம்முடைய மரணத்தின் நினைவுகூருதலாகயிருப்பவற்றை தொடங்கவிருக்கும் ஆவிக்குரிய விருந்தைக் குறித்த கருத்தினை அவர் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார்** அந்த நிகழ்ச்சியின் போதும் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இரவிலும் அவர் **பங்கு கொள்ளவிருக்கிற தம்முடைய சரீரத்தைக்குறித்தும் இரத்தத்தைக்** குறித்தும் பேசினார். இந்த ஒத்த சொற்றொடர் நிதானமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவருடைய நாளில் கவனித்துக்கேட்டு இரத்தம் புசிப்பதை அனுமதிக்காத பழைய ஏற்பாட்டு கட்டளைக்கு பழக்கப்பட்டு போனவர்களுக்கு

பெண்கள் பகுதி

# பண்டிகைகளின் நோக்கம்
## The Purpose of the Feasts

*-Betty*



பஸ்கா பண்டிகை மற்றும் இஸ்ரவேலர் தங்களுடைய பாவங்களுக்காகச் செலுத்த வேண்டியிருந்த மிருகபலி போன்றவற்றின் நோக்கத்தைக் கற்றுக்கொள்ள நாம் வேத வாக்கியங்களை உற்று நோக்கும் வேளையில், அவைகள் எகிப்திலிருந்து தேவனால் பரிசுத்தமடைவதற்கும் மீண்டும் சுட்டிக்காட்டுகின்ற நினைப்பூட்டுகிறவைகள் மாத்திரமல்ல என நாம் உணருகிறோம்; அவைகள் வரப்போகிற பஸ்கா ஆட்டுக்குட்டியையும் இயேசு கிறிஸ்து என்பவரிலுள்ள பாவ-பலியையும் குறித்த தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட விஷயங்களாயிருந்தன. இன்று செய்யப்படுகிறதான கிறிஸ்துவின் மரணத்தின் நினைவு கூருதலாக சபைக்குக் கொடுக்கப்பட்ட அந்த நினைவு விருந்து பழைய ஏற்பாட்டின் விருந்தைப் போன்றதே ஆகும்: இது சிலுவைக்குக் கொண்டு சென்று அவருடைய வருகையை எதிர்நோக்கியிருக்கப்பண்ணுகிறது. “ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்” (1கொரி.11:26).

**கர்த்தருடைய பந்தியின் அறிமுகம்**

இந்தப் பந்தியின் ஆரம்பம் என்ன?

“வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, “பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து; இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்....” (லூக்.22:14-16,19,20).

முன்பதாக, இந்த நினைவு விருந்தைக் குறித்து ஒரு தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட விஷயத்தில், இயேசு இவ்வாறு சொல்லியிருந்தார்:



சிலுவையின் மேல் மரித்தபோது அதை நிறைவேற்றினார், இவ்வாறாக பழைய பிரமாணத்தை நடுவிலிராதபடிக்கு எடுத்துப்போட்டார் (கொலோ.2:14). இந்தக் காரியம் இவ்வாறிருக்கையில், நாம் சங்கீதத்தை அல்லது பழைய ஏற்பாட்டின் மற்ற பகுதியை இன்று ஆராதனையில் வாத்தியகருவி இசையை நியாயப்படுத்துவதற்கு பயன்படுத்த முடியாது. நம்முடைய தற்போதைய காலத்தில் செய்யாத மற்றும் செய்ய இயலாத பல காரியங்கள் அப்போது செய்யப்பட்டது.

இதை நியாயப்படுத்தும் முயற்சியில் இன்னொரு முக்கியமான வாக்குவாதம், பரலோகத்தில் இசைக் கருவி பயன்படுத்தப்படும் என்பதாகும். பரலோகத்தில் இசைக்கருவி இருக்குமானால், நிச்சயமாக நாம் இந்த பூமியிலே ஆராதனையில் இசைக் கருவி பயன்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம் என அவர்கள் தீர்மானிக்கின்றனர். உண்மையாகவே அவர்கள் வாத்தியக்கருவியைப் பற்றிபேசிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் நேரடியான மனிதனால் உருவாக்கப்பட்ட, இயந்திர இசைக்கருவிகள் இருக்குமென வெளிப்படுத்தின விசேஷப்புத்தகத்தில் அல்லது வேறெங்கே வாசிக்க முடிகிறது? ஆனால் அப்படியே வாத்தியக்கருவியின் இசை இருக்குமானால், இன்று ஆராதனையில் அதை பயன்படுத்தும்படி நமக்கு கர்த்தர் அனுமதியளித்துள்ளார் என அர்த்தமாகிறதில்லை. பூமியிலே நாம் பெற்றிராத அநேகப் பொருட்கள் பரலோகத்தில் உள்ளன என்பது உண்மையான விஷயம். தேவன் குறிப்பாக ஆராதனையில் இன்று என்ன எதிர்பார்க்கிறார், மேலும் கடைசியாக பரலோகத்தில் தோற்றமளிக்கிற இருவேறுபட்ட பொருட்கள் என்ன?

வேதாகம வித்துவான்களும், பெரிய மதத்தலைவர்களும் பல வருடங்களுக்கு மேலாக வேதவாக்கியங்கள் மற்றும் வேறு குறிப்புகள் போன்ற இரண்டிலுமிருந்தும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ஆராதனையில் வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தினார்கள் என்பதற்கான எந்த குறிப்பும் இல்லையென ஒத்துக்கொண்டுள்ளனர். ஆனபடியினால் இந்த தலைவர்களில் பலர் அவர்களுடைய நாட்களிலும் மற்றும் நம்முடைய நாட்கள் வரைக்கும் தேவனை ஆராதிக்கையில் ஜனங்கள் வாத்தியக்கருவிகளைப் பயன்படுத்தவில்லை என்று தீர்மானித்தார்கள். உதாரணமாக, கத்தோலிக்க சபை இறுதியாகப் பிரிந்தது, இந்த பிரிவு தேவனைத் துதிப்பதில் வாத்தியக்கருவி இசை தங்களுடைய பாடல்களில் இடம்பெறவேண்டுமா என்ற கேள்வியை கொண்டுவந்தது என்பது பல காரியங்களில் ஒன்று. அந்தக் குழு இது சேர்க்கப்பட வேண்டுமென நினைத்து, ரோம கத்தோலிக்க சபையாக மாறியது, ஆகவே அவர்கள் இன்றுவரை அதை பயன்படுத்திவருகிறார்கள். இன்னொரு குழு வாத்தியக்கருவி இசையை பயன்படுத்த மறுத்து, கிரேக்க ஆர்த்தடாக்ஸ் சபை என மாறியது, அவ்வாறாக இவர்கள் இன்று வரை தங்கள் ஆராதனை வேளைகளில் அவைகளைப் பயன்படுத்துகிறதில்லை. அதற்கப்புறம், சீர்திருத்தலும் பிராட்டஸ்டண்ட் இயக்கங்களிலும், ஜான் வெஸ்லி போன்ற மனிதர்கள், தேவன் தம்முடைய பரிசுத்த வார்த்தைகளில்

முன்குறிக்கப்பட்டுள்ளபடி ஆராதனைக்குரிய தேவனுடைய தெய்வீக திட்டத்தில் இப்பேர்பட்ட வாத்தியக்கருவி இசையை சேர்ப்பதற்கு தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

தேவனுடைய வார்த்தைக்குத் திரும்புகையில், நாம் வாசிக்க வேண்டிய அநேக வேத வசனங்கள் உள்ளன. கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்ட பிற்பாடு கர்த்தரும், சீஷர்களும் உருவாக்கிய ஒரு கூற்றுடன் ஆரம்பிப்போம். “அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்” (மத்.26:30) என வாசிக்கிறோம். பிறகு பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு கால்கள் தொழுமரத்திலே மாட்டப்பட்டு அவர்கள் உட்காவலறையிலே அடைக்கப்பட்டார்கள், இவைகளெல்லாம் கர்த்தருக்கு ஊழியம் செய்ததினால் ஏற்பட்டது, இது, “நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்” (அப்.16:26) என்று சொல்கிறது. பவுல் கொரிந்துப்பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு “என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்” (2கொரி.14:14,15). என்று எழுதினார். யாக்கோபு, “உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்” (யாக்.5:13) என்றார். வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் சங்கீதம் பாடுவது பற்றி பல கூற்றுகள் உள்ளன. யோவான், “தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்றும் “அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியான வருடைய பாட்டையும் பாடி சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்” (வெளி.15:3) என்று எழுதினார். முன்பு அறிவித்தபடி வெளிப்படுத்தின விசேஷம் எவ்வாறு யோவான் பரலோகத்தில் சத்தத்தைக் கேட்டான் என்பது பற்றியும் கூறுகிறது, “...... நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது” (வெளி.14:2) என்றான். ஆனால் தயவு செய்து கவனியுங்கள் அவன் பெருவெள்ள இரைச்சல்போலவும்,



பலத்த இடிமுழக்கம்போலவும் ஒரு சத்தத்தையும் கேட்டான் மேலும் அவன் நான்கு மிருகங்களைக் குறித்து பேசுகிறான். “..... பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்துநாலாயிரம்பேரே...” (வெளி.4:2,3). இங்கே வெளிப்படுத்தின புத்தகம் முழுவதும், யோவான் தான் பரலோகத்தில் என்ன பார்த்தான், என்ன கேட்டான் என்பதைப் பற்றி மனிதனுக்குத் தெரியப்படுத்தும் முயற்சியில் பல எண்ணிக்கையிலான அர்த்த விசேஷபாஷையைப் பயன்படுத்துகிறான். ஆனபடியினால் அவன் பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும், சுரமண்டலக்காரர் வாசிக்கிற சுரமண்டல ஓசையைப் போலவும் கேட்டான். ஆனால் பரலோகத்தில் நேரடியான, பூமிக்குரிய, வாத்திய கருவிகள் தான் இருந்தன என்பதாக அவன் அர்த்தப்படுத்தவில்லை.

சங்கீதம் பாடுவது அல்லது தேவனை ஆராதிக்கையில் நம்முடைய பாட்டுடன் வாத்தியக்கருவியின் இசையைக் கொண்டிருத்தல் போன்ற காரியத்தோடு, இது பிரமாணத்திற்கடுத்த ஒரு காரியமாகும். வேதாகமம் எங்கு பேசுகிறதோ அங்கே பேசுவோம், அது எங்கு அமைதியாயிருக்கிறதோ அங்கே அமைதியாயிருப்போம் அல்லது தேவன் சொல்லியிருக்கிறவற்றிற்கு புறம்பாக நாம் என்ன செய்ய விரும்புகிறோமோ, அதை தொடர்ந்து செய்வோமா? வேதாகமம் கிறிஸ்து பரலோகத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் கொண்டவராயிருக்கிறாரெனவும் ஆனபடியினால் அவர் பேசியிருக்கிறார் எனவும் கூறுகிறது. ஆகவே நாம் அவருக்கும் அவருடைய வார்த்தைக்கும் கனத்தை செலுத்தி அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு மாறாக வேறொன்றையும் செய்யக்கூடாது. ஆனபடியினால் நாம் ஆராதனையில் வாய்மொழி சங்கீதம் அல்லது பாட்டு பாடுவதற்கு மட்டும் இடமளிக்க நம்முடைய இசைக் கருவி இசையைக் கட்டுப்படுத்தவேண்டும். அதன்பின் மட்டுமே, தேவன் அதில் பிரியமாயிருப்பாரென நிச்சயமுடையவர்களாயிருக்க முடியும்.

நீங்கள் எவ்வாறு தேவனை ஆராதிக்கிறீர்கள்? இது நீங்கள் அறிய வேண்டிய காரியம். நீங்கள் கிறிஸ்தவரா? இல்லையென்றால் நீங்கள் கிறிஸ்தவராக மாற நாங்கள் விரும்புகிறோம். கிறிஸ்து, “விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்.....” (மாற்.16:16) என்றார். அதன் பின் கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்க்கிறார் என வாசிக்கிறோம் (அப்.2:47) இரட்சிக்கப்பட்ட ஒரு நபராக, கர்த்தருடைய சபையில் ஒரு அங்கத்தினனாக, தேவனை ஆவியோடும் உண்மையோடும் நீங்கள் தொழுது கொள்ள முடியும் (யோவா.4:24).

**தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும் என்று அறிவேன்; அதினோடே ஒன்றும் கூட்டவுங் கூடாது, அதிலிருந்து ஒன்றும் குறைக்கவுங் கூடாது; மனுஷர் தமது சமுகத்தில் பயந்திருக்கும்படி தேவன் இப்படிச் செய்து வருகிறார் – பிரசங்கி 3:14**